**இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 ஏக்கர்களையுடைய புத்தள விவசாய பண்ணை வளவில் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 1,451,198 செலவில் கிணறொன்றை அமைத்தல், யானை வேலி திருத்துதல், கூட்டுப்பசளைத் தளமொன்றை நிர்மாணித்தல் போன்ற காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் 16 ஏக்கர்களையுடைய தனமல்வில விவசாய பண்ணை வளவில் சிறிய நீர்ப்பாசன குளங்களை | காணியின் உரித்தை கையேற்காதிருந்தமை குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்படா திருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். அதனை எதிர்காலத்தில் அவ்வாறில்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே இந்தக் காணி நீண்டகால குத்தகை அடிப்படையில் | தாமதமின்றி காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மறுசீரமைப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 500,000 முற்பணம் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதும், அந்தக் காணிகளின் உரித்தை சபைக்கு கையேற்று நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அது இறுதிக் கட்டத்தில் உள்ளது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 691,211 தொகை 08 வருடங்களை விட பழைய அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதியாக காணப்பட்டதுடன் அது கடன்பட்டோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட சில கடன்பட்டோர்கள் போலியாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாண பரிசோதனையை நடாத்துவதற்காக விவசாய இராஜாங்க அமைச்சு நியமித்த உத்தியோகத்தரால் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுள்ள உத்தியோகத்தரின் உதவி தேவையாக இருந்ததாக கூறப்பட்டிருந்தது. அதற்காக விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | தாமதமின்றி கடன்பட்டோர் மீதி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,185,489 தொகையான பெற வேண்டிய மீதியில் ரூபா 512,381 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிராஜ் பிரியசாந்த மலவி ஆராய்ச்சிகே என்பவரின் கடனை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரிசி செயற்திட்டத்திலிருந்து அறவிடுவதற்குள்ள ரூபா 67,282 தொகை இந்த நிறுவனத்திற்குள்ளே பொருட்கள் பரிமாற்றல்களாக இனங்காணப்பட்டுள்ள துடன் அது இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை . ஏனைய கடன்களை அறவிடுவதற்காக மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | தாமதமின்றி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்.**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104 | 2018 ஆம் ஆண்டில் அனுராதபுரம் உபுல்தெனிய களஞ்சியத்தில் ஏற்பட்ட ரூபா 4,094,596 பெறுமதியான சோயா அவரை 37,223 கிலோகிராம் காணாமல் போனமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 பரிசோதனையின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக்கு உரிய பணமான ரூபா 4,094,596 தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புவாய்ந்த தரப்பினடமிருந்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) | பணிகள் நிறைவு பெற்றவுடன் பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 06 உத்தியோகத்தர்களுக்கு பிரயாண செலவினம், நானாவித கொள்வனவுகள் மற்றும் உபசரிப்பு செலவினங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 660,400 தொகையான 24 முற்பணங்களை தீர்த்து வைப்பதற்காக 07 நாட்கள் முதல் 199 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | கொவிட்-19 தொற்று நிலைமையின் காரணமாக சபை மூடப்பட்டிருந்தமையினால் சில முற்பணங்களை உரிய காலஎல்லையில் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறில்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முற்பணம் தீர்க்கப்படல் வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சபையின் 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உரிய வருடத்திற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரங்கள், | விவசாய அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

உரிய ஆண்டிற்கான பாதீடு, பிரதான பெறுகை திட்டங்களுக்கான பெறுகைகளுக்கான பெறுகைத் திட்டம், வருடாந்த செயல்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் நிதி விளைவுகள் ரூபா 3,828,645 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் மிகை ரூபா 12,505,208 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,333,853 வீழ்ச்சியை காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் திறைசேரியிலிருந்தும் விவசாய அமைச்சிலிருந்தும் கிடைத்த நிதியேற்பாடு ரூபா 11,279,307 இனால் குறைவடைந்தமை, ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 4,352,757 இனால் குறைவடைந்தமை, வட்டி வருமானம் ரூபா 3,604,784 இனால் குறைவடைந்தமை என்பன மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்களித்திருந்தன.

### 2.2 பிரமான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் திறைசேரி / அமைச்சு மானியம், ஏனைய செயற்பாட்டு வருமானம், வட்டி வருமானம், ஏனைய வருமானம் என்பன முறையே 23, 52, 24 மற்றும் 58 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே ஊழியர் ஊதிய செலவினம், வழங்கல் மற்றும் தேவை செலவினம் மற்றும் போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் என்பன முறையே 09, 11, 03 மற்றும் 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு பிரசார சபை சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் அல்லாத குளங்களில் மண் அகற்றி அதிவேக வீதிகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மண் அகற்றுவதற்காக ரூபா 3,370,595 செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அதிவேக | சபையின் சட்டத்தின் பிரகாரம் சபையின் பொது நோக்க இலக்கம் 02 இன் படி சபையின் அதிகாரத்தின் கீழ் இலக்கம் 04 இன் சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் இந்த அபிவிருத்தி செயற்பாடுகள் 2017/2018 என்ற ஆண்டுகளின் | சபையின் சட்டத்தின் பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிலையான வைப்புக்களில் உள்ள பணம் ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வீதிகளுக்கு மண் விற்பனையால் ரூபா 81,134,631 வருமானம் பெறப்பட்டிருந்தது. குள செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட மண்ணிற்காக உரிய விவசாய அமைப்பு சபைகளில் இருந்து பணத்தை பெற்று அந்த பணத்தை அரசாங்கத்தின் நிதியேற்பாட்டுடன் ஈடுபடுத்தி சிறிய குளங்களை உரிய நியமத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியலாளர் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறின்றி ரூபா 77,764,036 தொகை நிலையான வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | போது சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திலிருந்து உழைக்கப்பட்ட பணம் அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் உரிய விவசாய அமைப்புக்களுக்கு மீள் நலனை பெற்றுக் கொள்ளும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்படும் வரை இந்த பணம் எந்தவொரு பணிகளுக்காகவும் ஈடுபடுத்தாமல் இருக்குமாறு விவசாய அமைச்சின் செயலாளரின் வாய் மூல ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இவ்வாறு நிலையான வைப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தனமல்வில விவசாய பண்ணையில் பொது மேந்தலைக் கிரயம் 60 சதவீதத்தை விட மேற்பட்ட சதவீதத்தில் சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் வருமானம் குறைவடைந்ததன் காரணமாக 2017 முதல் 2021 ஆம் ஆண்டு வரையும் தேறிய நட்டம் பெறப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் எந்தவொரு வருமானமும் பெற்றுக் கொள்ளாமையினால் தேறிய நட்டம் ரூபா 874,826 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்த விவசாய பண்ணைகளை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர் இருவரின் சம்பளத்திற்காக செலவிடப்பட்ட பணம் இந்த செயற்திட்டத்தின் தேறிய நட்டமாக காண்பிக்கப்படுகின்றது. | இலாபத்தை பெறக்கூடிய வகையில் விவசாய பண்ணைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) சபையினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நாற்று மேடைகள், பாரம்பரிய அரிசி | எமது சபைக்குரிய பிரதேச அலுவலகங்களில் பேணிச் செல்லப்பட்ட | சபையினால் இலாபம் பெறக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை செயற்திட்டம் மற்றும் விவசாய பண்ணை போன்ற 08 செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்கள் தேறிய நட்டத்தை பெற்றிருந்ததுடன் அந்த 05 செயற்திட்டங்களின் தேறிய நட்டம் ரூபா 8,400,212 ஆகும். | செயற்திட்டங்களில் அநேகமானவை 2020 ஆம் ஆண்டு முதல் செயற்படவில்லை. தெஹிவளை எக்ரோ பேஸ் விற்பனை நிலையம், நாரஹேன்பிட்ட நாற்றுக்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம், தனமல்வில விவசாய பண்ணை, பராம்பரிய அரிசி செயற்திட்டம் மற்றும் கடங்குட்டிய தொழிற்சாலை போன்றவற்றில் எந்தவொரு செயற்திட்டமும் செயற்படாதிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் நிர்வாக செலவினங்கள் மாத்திரம் செலுத்தப்பட்டமையால் சகல செயற்திட்டங்களும் தேறிய நட்டத்தினை காண்பிக்கின்றது. | வகையில் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | கடந்த 04 ஆண்டுகளின் போது இலாபம் பெற்ற சபை மீளாய்வாண்டில் ரூபா 3,828,645 தேறிய நட்டத்தை பெற்றிருந்தது. சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களில் அநேகமானவை ஆகக்குறைந்த செயலாற்றல் காணப்பட்டமை ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல் தொடர்பிலும் தாக்கமளித்தமை அவதானிக்கப்பட்டது. | எமது நிறுவனத்தால் வருமானம் உழைக்கக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்ட சில செயற்திட்டங்கள் கணக்காய்வினால் எமது நிறுவனத்திற்கு உரித்தல்லாத செயற்திட்டங்களாக இருந்தமையை காண்பிக்கும் அடிப்படையில் இவ்வாறான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக உயர் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் குறைவடைந்தமை இந்த நிலைமைக்காக அநேகமாக தாக்கமளித்திருந்தன. உதாரணம் 1 - சோள இறக்குமதி, உதாரணம் 2 | நட்டம் பெறுகின்ற செயற்திட்டங்களை இலாபம் பெறக்கூடிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | - குள செயற்திட்டம். எனினும் இவ்வாறான செயற்திட்டங்களின் மூலம் எமது நிறுவனம் கணிசமான இலாபத்தை உழைத்து நலனாளிகளுக்கும் சிறந்த சேவையொன்றினை நிறைவேற்றியிருந்தது. அதனால் எதிர்காலத்தில் உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி வருமானத்தை உழைக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2019 முதல் 2021 வரையான 03 வருட காலத்தில் சபையினால் விவசாயத் திணைக்களத்தில் கண்ணொருவ உணவு தொழில்நுட்ப அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தாய் போசணை செயற்திட்டம், சுகபோச செயற்திட்டம், தோசை மா உற்பத்தி செயற்திட்டம், சோயா சார்ந்த உணவு உற்பத்தி செயற்திட்டம், பழச்சாறுகள் செயற்திட்டத்தை உள்ளடக்கிய சகல செயற்திட்டங்களினதும் இயந்திரங்கள் செயலிழந்தமை மற்றும் மூலப்பொருட்கள் வழங்குவதில் உள்ள பிரச்சினைகளால் நிறுத்தப்பட்டிருந்தது. | சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள நிலைமைகளில் அநேகமானவை வழமையாக இருந்ததுடன் மீண்டும் இந்த செயற்திட்டங்களை உயிரூட்டுவதற்காக கண்ணொருவ உணவு ஆராய்ச்சி பிரிவுடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயலிழந்துள்ள செயற்திட்டங்களை செயற்பாடுள்ள நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015, 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015/2016 ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் அறிக்கைக்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2018 இன் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்காக அச்சிடப்படுகின்றது. 2019/2020 இன் ஆண்டறிக்கைகளின் மொழிபெயர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தாமதமின்றி ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |